**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 83/2026**

**Dated: 12.05.2026**

**Deposition of Witnesses for PW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு. இளஞ்செழியன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம் இளையான்குடி வடக்கு குரூப் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.01.2026 இளையான்குடி வடக்கு குரூப்பில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தபோது இளையான்குடி சார்பு ஆய்வாளர் திரு.சிவசுப்பு என்பவர் என்னை தொலைபேசியில் அழைத்து இளையான்குடி To சாலையூர் புறவழிச்சாலை ஊரணி அருகே உள்ள முட்புதர் அருகே சந்தேகத்திற்கு இடமாக ஒரு நபர் கட்டை பையுடன் இருப்பதாகவும் அவரை விசாரிக்க என்னையும் கிராம உதவியாளரையும் அழைத்ததன் பேரில் அதற்கு சாட்சியாக இருக்க அழைத்ததன் பேரில் எனது அலுவலகத்திலிருந்து நானும் கிராம உதயிவாளர் செந்திலும் புறப்பட்டு பகல் 1.35 மணிக்கு சம்பவ இடமான இளையான்குடி To சாலையூர் புறவழிச்சாலை ஊரணி அருகே உள்ள முட்புதர் சென்றோம். சார்பு ஆய்வாளர் எங்கள்

முன்னிலையில் அந்த நபரை விசாரித்தபோது அவர் பெயர் மணிஷ் த/பெ.பிரபு என்று தெரிவித்தார். அவர் வைத்திருந்த கட்டை பையை வாங்கி எங்கள் முன்பாக சார்பு ஆய்வாளர் சோதனை செய்தார். அதில் பழுப்பு நிற இலைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதனை சார்பு ஆய்வாளர் முகர்ந்து பார்த்து கஞ்சா என்று உறுதி செய்து கொண்டார். சார்பு ஆய்வாளர் எடை மிசினில் எடை போட்டு பார்க்க அது 3.000 கிலோ கஞ்சா இருந்தது. எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்ய அதில் சாட்சியாக நானும் கிராம உதவியாளர் செந்திலும் கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **சாட்சி கையொப்பம் மட்டும் அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கஞ்சா வைத்திருந்த காரணம் கூறி சார்பு ஆய்வாளர் கைது அறிவிப்பு கொடுத்து கைது செய்தார். அந்த கைது அறிவிப்பு கடிதத்தில் நானும் கிராம உதவியாளரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அந்த கைது அறிவிப்பு கடிதம் ஏற்கனவே அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அதசாஆ.4-ல் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கஞ்சா மற்றும் கட்டை பையினை கைப்பற்றினார். அதற்கானக கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி மற்றும் தடய சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு ஆய்வாளர் எதிரியை அழைத்து சென்றார். நானும் எனது உதவியாளரும் எங்கள் அலுவலகத்திற்கு வந்து விட்டோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இளையான்குடி வடக்கு குரூப் கிராம நிர்வாக அலுவலராக எத்தனை வருடங்களாக வேலை பார்க்கிறேன் என்றால் 10 மாதங்களாக வேலை பார்க்கிறேன். 18.01.2026 அன்று சார்பு ஆய்வாளர் தொலைபேசி மூலமாக என்னை அழைத்தார்.சார்பு ஆய்வாளர் தொலைபேசி மூலம் அழைத்தபோது மணி சுமார் 1.10 இருக்கும் என்றால் சரிதான். எங்களுடைய அலுவலகத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 500, 600 மீட்டர் இருக்கும். இவ்வழக்கிற்கு முன்பு வேறு எதுவும் கஞ்சா வழக்களில் வாக்குமூலம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இதுவே முதல் தடவை ஆகும். சம்பவம் நடந்த இடத்திற்கு நான் போய் பார்த்தபோது கஞ்சா பொட்டலங்களாக இல்லை கஞ்சா கட்டை பையில் இருந்தது. கஞ்சா எடை போடும் மிசின் துல்லியமாக இருந்ததா என்றால் துல்லியமாக இருந்தது. அதை நான் பார்த்தேன். கஞ்சாவை கட்டை பையில் வைத்து எடை பார்த்தோம். அப்போது கஞ்சா 3 கிலோ இருந்தது. கைப்பற்றுதல் மகஜரில் கையால் எழுதப்பட்டதா அல்லது மடிக்கணிணி மூலம் டைப் செய்யப்பட்டதா என்றால் கைப்பற்றுதல் மகஜர் கையால் தான் எழுதப்பட்டிருந்தது. கைப்பற்றுதல் மகஜரின் இடது பக்கம் டைப் செய்யப்பட்டதாகவும், வலது பக்கம் கையால் எழுதப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். எதிரிக்குரிய ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் மடிக்கணிணியில் பதிவு செய்து அதை ஒரு காவலரிடம் நகல் எடுத்துமாறு கூறினார். அந்த காவலரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தை சம்பவ இடத்தில் வைத்துதான் டைப் செய்துள்ளீர்களா என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணிணியில் பதிவு செய்துள்ளீர்கள். கைப்பற்றுதல் மகஜரை இடது புறம்

மடிக்கணிணியில் பதிவு செய்தும், வலது புறம் கையில் எழுதியது ஏன் என்றால் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தபின்பு தான் ஒப்புதல் வாக்குமூலம் மடிக்கணிணியில் தயார் செய்யப்பட்டது. சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்றேன். அங்கு கண்ணில் பார்க்கும் தூரத்திற்கு என்ன எல்லாம் இருந்தது என்றால் ஊரணியில் கருவே மரங்கள் இருந்தது. ஊரணியிலிருந்து எந்த திசை நோக்கி சம்பவம் நடந்தது என்றால் மேற்கு பகுதியில் சம்பவம் நடந்தது. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.